# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. NO. 127 /2020**

**PW 6**

| | | |
|---|---|---|
| Name | : | பாபுசத்தீசன் |
| Father's/Husband's Name | : | ஜோன்ஸ் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.02.2025.

**A1 to 7 present.**

**முதல் விசாரணை -**

(1) நான் கீரனூர் குரூப் கலிங்கலேரி கிராம உதவியாளராக பணி செய்து வருகிறேன் . இந்த வழக்கில் இறந்துபோன சிவா (எ) எமகாசிவா என்பவரை தெரியாது . 2017 வருடத்தில் கலிங்கலேரி உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன் . அப்போதே என்னுடன் பணிபுரிந்த கிராம நிர்வாக அலுவலர் ஜெகதீசன் என்பவர் தற்போது உயிருடன் இல்லை. சுமார் 7 வருடங்களுக்கு முன்னர் நான் கீரனூர் கிராமத்தில் இருந்தபோது வி.ஏ.ஓ. ஜெகதீசன் என்னை அழைத்துக்கொண்டு செல்லங்குப்பம் கிராமத்திற்கு அழைத்து சென்றார் . என்னிடம் காட்டப்படும் எதிரி குப்பம்மாள் என்பவரின்ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் . கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அவற்றை எங்கு எதற்காக போட்டேன் என்று எனக்கு ஞாபகமில்லை . **காளி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள என** து

**கையொப்பங்கள் முறையே அ .சா.ஆ.2 மற்றும் அ .சா.ஆ.3. எதிரி குப்பம்மாள் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது கையொப்பங்கள் முறையே அ .சா.ஆ.4 மற்றும் அ .சா.ஆ.5.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசுதரப்பு குறுக்கு விசாரணை -**

போலீசார் விசாரணையில் 07.12.2017 ம் தேதியன்று காலை 9.00 மணிக்கு கீரனூர் பஸ் நிறுத்தத்தில் வேட்டவலம் காவல் ஆய்வாளர் எதிரிகள் காளி மற்றும் குப்பம்மாளை விசாரித்தபோது நானும் , கிராம நிர்வாக அலுவலர் ஜெகதீசன் ஆகியோர்கள் முன்னிலையில் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ஜெகதீசனும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் செல்லங்குப்பம் என்ற கிராமத்திற்கு சென்று அங்கு பெரிய குளத்தின் அருகில் இருந்த முட்புதரில் இருந்த எதிரிகள் மறைத்து வைத்திருந்த இரண்டு முள்வேலி கொம்புகளை இரண்டு கைப்பற்றுதல் மகஜர்களில் முறையே காளி மற்றும் குப்பம்மாளிடமிருந்து கைப்பற்றினார்கள் என்றும் அதில் நானும் ஜெகதீசனும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும் தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மைகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C. Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.